# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்: 12 இதழ் : 07 ஜூலை 2026 தனிபிரதி - ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.200/-
Vol : 12 Issue No : 07 July 2026 Single Copy – Rs.20/- Annual Subscription Rs.200/-



## அன்பரின் ஊழிய மாதாந்திர பத்திரிக்கை செய்திகள் வாயிலாக ஆவிக்குரிய ஜீவியத்தில் நன்கு வளர்ந்தேன்! பத்திரிக்கையில் படித்த சாட்சிகளின்படி என் தம்பிக்கும் கர்த்தர் புது ஜீவன் தந்தார். பிறந்தது முதல் சப்பாணியாக இருந்த மகன் எழும்பி நடந்தான்!

என் தம்பிக்கு ஏற்பட்ட திடீர் விபத்தில் உடல் முழுவதும் சிதைந்து, எலும்புகள் உடைந்து இரத்த கசிவு ஏற்பட்டு, ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். இனி பிழைக்க வாய்ப்பில்லை என்ற நிலையில் தம்பியை ஒரு துணியால் சுற்றி வைத்து விட்டார்கள். அப்பொழுது என் ஆசிரியை ஒருவர் அன்பரின் ஊழிய மாதப்பத்திரிக்கையை கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார்கள். அந்தப் பத்தரிக்கையிலிருந்த ஒரு சாட்சி என்னை மிகவும் தொட்டது. அது என்னவென்றால், Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள், உயிரிழந்த ஒரு நபருக்காக ஜெபித்தபொழுது இறந்தவர் உயிரோடு வந்தார்" என எழுதப்பட்டிருந்தது. அந்த சாட்சி என் விசுவாசத்தை அதிகரித்தது. உடனே நானும், அந்த ஆசிரியையும் இணைந்து எனது தம்பிக்காக ஜெபித்தோம். ஜெபித்துக் கொண்டிருந்தபொழுது ஒரு தேவ தூதன் வந்து எனது தம்பியை தொட்டது போல கண்டேன். அதன்பின் மருத்துவர்களே ஆச்சரியப்படும் வகையில் தம்பியின் உடலில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. இன்று வரை நல்ல சுகத்துடன் இருக்கிறான்.

மேலும் என்னுடைய அக்கா மகன் பிறந்தது முதல் சப்பாணியாக எங்கள் வீட்டில்தான் இருந்தான். அவனால் எழும்பி நடக்க முடியாது. அவனைப் பார்க்கும் பொழுது எனக்கு வேதனையாக இருந்தது. உடனே நான் ஜெபித்தபொழுது பிறவி சப்பாணியான மகன் எழும்பி நடந்தான்.



இந்த இரண்டு அற்புதங்கள் மூலம் இயேசுவின் மேல் உள்ள விசுவாசம் அதிகமானது. அதன்பிறகே நான் சபைக்கு போக ஆரம்பித்தேன். இன்று குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், பிதாவாகிய தேவனுக்கும் துதியும், கனமும், ஸ்தோத்திரமும் உரித்தாவதாக! ஆமென்!

– திருமதி.பெரில் காருண்யா, தஞ்சாவூர்

# அன்பரின் ஊழியம்



Dr. ஜேன் ஜாஷ்வா

## ஆசிரியர் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

நம் ஆண்டவரும் உலகின் இரட்சகருமான இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.

இந்த மாத பத்திரிக்கையின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த புதிய மாதத்திலும் கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

வேதத்தில் சிம்சோனைக் குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவன் பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனாயிருந்து, இஸ்ரவேலைப் பெலிஸ்தியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சித்த பலசாலியான மனிதன். சிம்சோனை கர்த்தருடைய ஆவியானவர் பெலப்படுத்தின படியால் அவன் அனைத்து சத்துருக்களையும் முறியடித்து வந்தான். ஆனால் பிசாசு அவனை பெண்களின் வாயிலாகவே வஞ்சித்து, அவனை வழிவிலகும்படி செய்தான். ஆம், பிசாசு அபிஷேகம் பண்ணப்பட்டவர்களையும் இச்சையில் தள்ளுகிறது. அதனால் கர்த்தருடைய ஆவியானவர் அவனைவிட்டு விலகியதை அவன் அறியாதிருந்தான். *அவன் நித்திரைவிட்டு விழித்து, கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல், எப்போதும்போல உதறிப்போட்டு வெளியே போவேன் என்றான். (நியாதி. 16:20)*

ஆசிரியர்/வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

| சந்தா விபரம் | இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-<br>வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/- |
|---|---|

காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627
தெலுங்கு: +91 9944536343
மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003

இன்றைக்கு நாமும் பல நேரங்களில் நம்முடைய பெலத்தில், நம்முடைய சுயத்தில் ஓடிக்கொண்டிருக்கிறோம். கர்த்தருடைய ஆவியானவர் நமக்குள் இருப்பதை நாம் உணர்வதில்லை. அவருடைய சொற்களுக்கு கீழ்ப்படிவதும் இல்லை. ஆகவே இனிவரும் நாட்களில் ஆவியானவர் துணையுடன் பெலசாலிகளாக மாறுவோம், கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம். உங்களை பெலப்படுத்துகிற கர்த்தருடைய ஆவியானவர் உங்களுக்குள் இருந்து, இயேசுவைப் போல உங்களை மாற்றி, உங்கள் மூலமாக பெரிய காரியங்களைச் செய்வாராக! *(பிலி.4:13)*

கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். இந்த மாதம் திருச்சியில் நடைபெற இருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். அன்பரின் ஊழியத்தை நேசித்து ஜெபித்து தாங்கி வருகிற பங்காளர்கள் ஒவ்வொருவருக்காகவும் கர்த்தரை துதிக்கிறேன். உங்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன். தொடர்ந்து ஊழியத்திற்காக ஜெபியுங்கள். உற்சாகமாய் தாங்குங்கள். ஆத்தும அறுவடை பணிக்கு நீங்கள் அனுப்புகிற காணிக்கை அதிக உதவியாக இருக்கிறது.

***இந்த ஜூலை மாதம் முதல் ஒவ்வொரு மாதத்தின் 1-ம் தேதியன்று மாலை புதிய மாதத்திற்கான ஆசீர்வாதக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம். தவறாது கலந்துக்கொண்டு பயன்பெறுங்கள்.***

கடந்த மாதம் அப்பாவிற்கு திடீரென ஏற்பட்ட பெலவீனத்தை மாற்றி கர்த்தர் அற்புத சுகத்தை தந்தார். அந்த நாட்களில் அப்பாவிற்காக ஊக்கத்தோடு ஜெபித்த உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகிறோம். தொடர்ந்து அப்பா, அம்மா இருவருடைய நல்ல சுகத்திற்காக பாரத்துடன் ஜெபியுங்கள். எங்கள் அனைவருடைய நல்ல ஆரோக்கியத்திற்காகவும், பயணங்களில் தேவ பாதுகாப்பு உண்டாகவும் ஜெபியுங்கள்.


<u>கிறிஸ்துவின் பணியில்</u>

*Dr.* **ஜேன் ஜாஷ்வா**

***jane@mojindia.org***




# கர்த்தருடைய ஆவியானவர் தரும் விடுதலை



தேவ செய்தி

*Bro.* ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா

எங்களுக்கு மிகவும் பிரியமான அன்பரின் ஊழிய பங்காளர்கள் ஒவ்வொருவருக்கும் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பான வாழ்த்துக் களை தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் அனைவரும் நலமென நம்புகிறேன். இந்த ஆண்டு துவங்கி ஆறு மாதங்களை கடந்து ஏழாவது மாதத்தை தேவகிருபையால் துவங்குகிறோம். அதற்காக கர்த்தரை துதிப்போம். நேரங்களும், நாட்களும் எப்படி ஓடுகிறது என தெரியவில்லை. ஆனால் பல மாற்றங்கள் நேரிட்டுக்கொண்டே இருக்கிறது. அது நம் குடும்பம், தனிப்பட்ட வாழ்க்கை, நம் படிப்பு மற்றும் வேலை காரியங்களாக இருக்கலாம்.

இந்த மாத செய்தியில் கர்த்தருடைய ஆவி நம் பட்சத்தில், நமக்குள் இருந்தால் என்னென்ன காரியங்கள் நடைபெறும் என்பதைக் குறித்து பார்க்க போகிறோம். *கர்த்தரே ஆவியானவர், கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. 2 கொரிந்தியர் 3:17* ஆம், வேதம் மிகவும் தெளிவாக இங்கு சொல்கிறது, பரிசுத்த ஆவியானவர் எங்கேயோ அங்கே விடுதலையுண்டு, பரிசுத்தம் உண்டு, மெய்யான சுதந்திரமுண்டு. மூல பாஷையில் இதை Liberty அல்லது Freedom என கூறுகிறார்கள். இதற்கு அர்த்தம் மெய்யான சுதந்திரம். பரிசுத்த ஆவியானவர் நம் மத்தியில் இருக்கும்பொழுது, சமாதானம் நிறைவாக இருக்கும். சந்தோஷம் நிலைத்திருக்கும்.

நன்கு முன்னேற்றம் அடைந்த பல வெளிநாடுகளுக்கு நான் சென்றிருந்தப் பொழுது, அங்குள்ள குடிமக்களின் வாழ்க்கை முறைகள் அனைத்திலும் முழு சுதந்திரம் இருப்பதை கண்டேன். அதனால் நம் பாரத தேசம் சுதந்திரம் இல்லாத ஒரு நாடு என கூறவில்லை. நம் நாடு எப்பொழுதும் சிறந்தது. ஆனால்

அமெரிக்கா, இங்கிலாந்து, சுவீடன் போன்ற நாடுகளில் மக்கள் ஒரு முழுமையான, கட்டுக்கடங்காத சுதந்திரத்துடன் இருப்பதை நாம் பார்க்கலாம். அங்கு அவர்கள் எதை வேண்டுமானாலும், யாரை வேண்டுமானாலும் விமர்சிக்க முழு அதிகாரத்தை பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஒரு நல்ல மனிதனுடைய வாழ்க்கையில் சுதந்திரம் என்றால் என்ன என்ற கேள்வி உங்களுக்கு வருகிறதா? நாம் நல்ல வாழ்க்கை வாழவேண்டுமென்றால், தேவனை பின்பற்ற வேண்டுமென்றால் பல விதிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்ற காரியங்கள் (நம்பிக்கைகள்) இருக்கிறது.

இந்த மாதத்தில் வித்தியாசமான சுதந்திரங்களை குறித்து நாம் பார்ப்போம். ஆவியானவர் யார்? *2 கொரிந்தியர் 3:17-ன்படி* அவர் தேவனாக இருப்பதால் அவர் இருக்கும் இடத்தில் விடுதலை, சுதந்திரம், சமாதானம் இருக்கிறது. விசேஷமாக நாம் இயேசுகிறிஸ்துவைப் போல மாறும்பொழுது பரிசுத்த ஆவியானவரை எளிதாக சுதந்தரித்துக்கொள்கிறோம்.

## கர்த்தருடைய ஆவி இருந்தால் மனதில் விடுதலை

*அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.*

*எபே. 1:14*

முதலாவது பரிசுத்த ஆவியானவர் நமக்கு மனவிடுதலையை தருகிறார். மனதில் தோன்றுகின்ற பலவகையான குழப்பங்களை தெளிவாக்குகிறார், அன்றாட வாழ்வில் ஏற்படுகிற சோர்வுகள், பயங்கள் மற்றும் தீய எண்ணங்களிலிருந்து நம்மை விடுதலையாக்குகிறார். ஏனென் றால் தேவனுக்கு இரகசியம் இல்லை. மனிதனுடைய எண்ணங்களும், மனிதனுடைய இரகசியங்களும் தேவனுக்கு முன்பாக வெளிப்படையாகவே இருக்கிறது. ஏனென்றால் நம் மனம், ஆத்துமா, சரீரம் அனைத்தையும் நன்கு அறிந்தவர் தேவன் மாத்திரமே, அவரே நம்மை படைத்தவர்.

*உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது. 1 கொரிந்தியர் 2:4-5* இந்த வசனத்தில் மனிதனுடைய ஞானத்தையும், ஆலோசனையையும் நம்புவது விருதாவாகும் என நாம் பார்க்கிறோம். நம்முடைய விசுவாசம் தேவனுடைய பெலத்திலும், வல்லமையிலும் இருக்க வேண்டும். பல நேரத்தில் நாம் தேவனை நம்புகிறோம். ஆனால் அவருடைய வல்லமையை நம்புவதற்கு தவறிவிடுகிறோம். நீங்கள் தெளிவாக புரிந்துக்கொள்வதற்கு உதவியாக ஒரு சம்பவத்தை இங்கு கூறுகிறேன்.

ஒரு சிறிய கிராமத்தில் வயதான ஒரு தாத்தாவும், ஒரு பேரனும் வசித்து வந்தார்கள். பேரன் கொஞ்சம் கொஞ்சமாக சேமித்து வைத்த பணத்தில் ஒரு கார் வாங்கினான், அந்த கார் ஒரு நாள்

விபத்துக்குள்ளாகி சேதம் அடைந்து ஓடாமல் நின்றுவிட்டது. ஆகவே அந்த கிராமத்தில் உள்ள பலரிடம் சென்று ஐயா, மெக்கானிக் வேலை தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் தயவு செய்து என்னுடைய காரை எனக்கு சரிசெய்து கொடுங்கள் என கேட்க ஆரம்பித்தான். அதற்கு அந்த ஊரில் உள்ளவர்கள், “உன் தாத்தா ஒரு மெக்கானிக்தானே அவர் உன் காரை சரிசெய்து விடுவார் தம்பி என சொன்னபொழுது,” அவனால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம் தாத்தா மிகவும் வயதானவர், அவருக்கு கை நடுங்கும், அவரால் புதிய கார் வேண்டுமானால் வாங்கி தருவார், பழுதான அந்த காரை அவரால் சரிசெய்து தரமுடியாது என சொன்னான். அன்று இரவு அவன் அயர்ந்து உறங்கிவிட்டான். காலை எழுந்து பார்த்தபொழுது, அந்த காரின் பழுது நீக்கப்பட்டு, முழுவதுமாக சரிசெய்யப்பட்டு புதுப்பொலிவுடன் நின்றது. அவனுக்கு மிகுந்த ஆச்சரியம், யார் இதை சரிசெய்தார்கள் என கேட்டபொழுது, தாத்தா சொன்னார், நீ அதை ஓட்டிப்பாரு என்றார். பிரியமானவர்களே, நாமும் பல சமயங்களில் தேவனால் இது கூடும் என விசுவாசிக்க மறந்துவிடுகிறோம். அதுதான் நம் மனகுழப்பங்களுக்கும், சோர்வுகளுக்கும் காரணமாக இருக்கிறது. அந்த பேரனைப் போல நாம் நம் சொந்த புத்தியின் மீதும், மனித புயத்தின் மீதும், மனித ஆலோசனையின் மீதும் நம்பிக்கை வைக்கிறோம். தேவனுடைய சர்வ வல்லமையை மறந்து விடுகிறோம். தேவனுடைய பெலன், தேவனுடைய வல்லமை என்றால் என்ன? அவை கண்களால் காணாததும், நாவுகளால் உச்சரிக்க முடியாததும், மனதினால் உணர முடியாததுமான அதிசயமானவைகள். ஆகவே உங்களுக்கும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை தேவை, இரகசியங்களை வெளிப்படுத்துகிற தேவ வல்லமை தேவை என இன்றைக்கு நம்புங்கள். *நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார், அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். 1 கொரிந்தியர் 2:10-ல்* சகலமும் அவருக்கு வெளிரங்கமாயிருக்கிறது என நாம் பார்க்கிறோம். அவருடைய ஆவி சகலவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் நமக்கு வெளிப் படுத்துகிறார். மனித கண்களால் பார்க்க இயலாத காரியங்களையும் ஆவியானவர் உங்களுக்கு வெளிப் படுத்துகிறார். உங்களுக்குள் பகுத்தறியும் ஆவி இல்லாத காரணத்தினால் அநேக துன்பங்களுக்கு உள்ளாகி, மனிதர்களால் வஞ்சிக்கப்படுகிறீர்கள், கைவிடப்பட்ட ஒரு நிலைக்கு தள்ளப்படுகிறீர்கள்.

வேதத்தில் தானியேலைக் குறித்து நன்கு அறிவோம். பாபிலோன் அரசன் இஸ்ரவேலை ஜெயித்தபொழுது, அவன் திறமைவாய்ந்தவர்களையெல்லாமல் பாபிலோனுக்கு அடிமைகளாக கொண்டு செல்கிறான். அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட அடிமைகளில் ஒருவர் தான் தானியேல். ஒரு சமயம் பாபிலோன்

அரசன் கலங்கின காரியங்களைக் குறித்து, அடிமையாக கொண்டு செல்லப்பட்ட தானியேலுக்கு வெளியரங்கமாயிருந்தது. இது எப்படி ஆகும்? அரச மாளிகைக்கும் தானியேல் தங்கிருந்த அறைக்கும் பல மைல்கள் தூரம் இருந்தது. தானியேல் அரசனைவிட்டு வெகு தூரத்தில் இருந்தாலும் அரசனின் உள் அறைகளில் நடைபெறுகிற காரியங்கள் அனைத்தையும் தம் ஆவிக்குரிய கண்களால் பார்த்துக்கொண்டிருந்தான். காரணம் கர்த்தருடைய ஆவி தானியேலுக்குள் இருந்தது. *2 தீமோத்தேயு 1:7-ல் தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என எழுதப்பட்டுள்ளது.*

பல நாட்களுக்கு முன்பாக ஒரு நபருடன் பேசிக்கொண்டிருந்தேன். அவருடைய பல முயற்சிகள், கையின் பிரயாசங்கள் எதுவும் நிலைக்கவில்லை, அவை அனைத்தும் பயனில்லாதவைகளாக இருக்கிறது என சொன்னார். அதற்கு நான் சொன்ன பதில், "நீங்கள் தேவசமூகத்தில் ஜெபித்து, கர்த்தரின் ஆலோசனைபடி அவருடைய வழிநடத்துதலின்படி செய்து பாருங்கள். சகல காரியங்களும் வாய்க்கும்" என்றேன். பல மாதங்கள் கழித்து நான் அவரை சந்தித்தபொழுது, அவர் சொன்ன பதில், கர்த்தருடைய வழிநடத்துதல்படி செய்வதால் இப்போழுது நன்றாக இருக்கிறேன் என்றார். பிரியமானவர்களே, நம் வாழ்வில் நமக்கு வருகிற உயர்வு, கனம் அனைத்தும் நம் பணத்தினாலோ, முயற்சியினாலோ அல்லது உழைப்பினாலோ வராது. அவை பரத்திலிருந்து மாத்திரமே வரும்.

## கர்த்தருடைய ஆவி இருந்தால் மனதில் தைரியம்

கர்த்தர் நமக்குள் இருக்கும்பொழுது மன நோயை அகற்றி, குழப்பங்களை நீக்கி, சோதனைகளை சுட்டெரித்து மன தைரியத்தை தருகிறார். அனைத்திலும் தெளிவை கட்டளையிடுவார். அப்படியென்றால், சிக்கலான எந்த காரியமாக இருந்தாலும், அவற்றை சரியாக முடிக்கக்கூடிய திறனை, மன தைரியமுள்ள ஆவியை தருவார். அத்துடன் நம் பிரச்சனைகளையும், பாடுகளையும், போராட்டங்களையும் நோக்கிப் பார்ப்பதற்கான தைரியத்தை தருவார். இந்த தைரியம், மன பெலன் இல்லாதபொழுது அவை துன்பமான காரியமாக மாறி தீங்கு நேரிடுகிறது. ஒரு சிலர் சொல்லுவார்கள், நீங்கள் அந்த துன்பமான காரியங்களைவிட்டு, அவற்றை புறக்கணித்துவிட்டு விலகிசெல்லும்படி ஆலோசனை தருவார்கள். ஆனால் நான் சொல்லுகிற காரியம் என்னவென்றால், அதை தைரியத்துடன் எதிர்கொள்ள வேண்டும்.

வேதத்தில் அப்போஸ்தலர் 3-ம் அதிகாரத்தில் நாம் பார்க்கிறோம். பிறவியிலேயே சப்பாணியாக பிறந்த ஒரு மனிதன், நாள்தோறும் அங்கு அமர்ந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். தேவாலயத்திலே பிரவேசிக்கிற மக்களும் அவனுக்கு ஏதாவது தர்மம் செய்துவிட்டு

செல்வார்கள். இது வழக்கான ஒரு காரியமாக அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்குள்ள ஜனங்களுக்கு இது புதிதான காரியம் அல்ல. ஆனால் பரிசுத்த ஆவியினால் நிறைந்த பேதுருவும் யோவானும் அந்த காரியத்தை மாற்றியமைத்தார்கள். அந்த இடத்தில் தைரியமாக செயல்பட்டார்கள். அதன் பயனாக பிறவியிலேயே கால் ஊனமுள்ள அந்த நபரின் கால்கள் பெலனடைந்து எழுந்து நடந்தான், மான் போல துள்ளிக்குதித்தான். விடுதலை, சுதந்திரம் பெற்ற தேவ மனிதர்களே, மக்களுக்கு விடுதலை, சுதந்திரத்தை அளிப்பதற்கான வல்லமையை பெற்றிருக்கிறார்கள். *அப்போஸ்தலர் 3:4-ல்* பேதுருவும் யோவானும் அவனை உற்றுப் பார்த்து எழுந்து நட என சொன்னபொழுது, தேவனுடைய சுகமளிக்கும் வல்லமை அவனுக்குள் இறங்கியது. கர்த்தருடைய வல்லமை அந்த கால் ஊனமுள்ள மனிதனுக்குள் சென்றபொழுது, உலர்ந்துப்போன எலும்புகள் ஜீவன் பெற்றது.

இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் உலர்ந்து போயிருக்கிற காரியங்களைப் தைரியமாக பார்த்து அவைகளுக்கு ஜீவன் உண்டாகட்டும் என கட்டளையிடுங்கள். உங்கள் குடும்பத்தில், பிள்ளைகள் வாழ்வில் முடமாகிப்போன அனைத்து காரியங்களிலும் இயேசுவின் நாமத்தில் ஜீவன் உண்டாகட்டும் என சொல்லுங்கள். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக முடவனை நடக்கச் செய்த வல்லமை உங்களுக்குள் இருக்கும்பொழுது முடமான அனைத்து காரியங்களும் உயிர் பெறும். உலக பிரகாரமான வாழ்க்கையில் அல்லது ஆவிக்குரிய வாழ்க்கையில் ஊனமான காரியங்கள் இன்று ஜீவன் பெறும். உங்களுடைய எதிர்காலத்தைக் குறித்த காரியமாக இருந்தாலும் சரி அல்லது நிகழ்காலத்தைக் குறித்த காரியமாக இருந்தாலும் சரி. அதை தைரியத்துடன் நோக்கிப்பார்த்து, முழு அதிகாரத்துடன் இயேசுவின் நாமத்தில் ஜீவன் பெறு என சொல்லிப்பாருங்கள். அனைத்தும் மாறும். உங்கள் வங்கி கணக்கைப் பார்த்து, பணப்பையைப் பார்த்து, உங்கள் வியாதியைப் பார்த்து சோர்ந்து போய் காணப்படுகிறீர்களா? இந்த மாதத்தில் அந்த குறைவுகள் நீங்கும், வியாதிகள் விலகும்.

## கர்த்தருடைய ஆவி இருந்தால் அதிசயங்கள் நடக்கும்!

*அப்போஸ்தலர் 9:36-42* வரையுள்ள வசனங்களில் ஒரு இளம் பெண் தபீத்தாளைக் குறித்து பார்க்கிறோம். அவள் வியாதிப்பட்டு மரணம் அடைந்தாள். அங்கிருந்தவர்கள் அவள் செய்த நற்கிரியைகளை சொல்லிக்கொண்டு இருந்தார்கள், அவளை சூழ இருந்த மக்கள் அவளுடைய மரணத்தைக் குறித்து வருந்தினார்கள். இதில் எதுவும் புதிது இல்லை. பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட பேதுரு, மரித்துப்போயிருந்த பிரேதத்தை நோக்கி, தபீத்தாளே எழுந்திரு என சொன்னவுடன் அவள் எழுந்து உட்கார்ந்தாள். பரிசுத்த ஆவியானவர் அந்த மகளை உயிர்ப்பித்தார். சூழ்ந்து

நின்ற மக்களால் அவளை புகழ முடிந்தது, இறப்பைக் குறித்து வருந்த முடிந்தது. ஆனால் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட மனிதரால் மட்டுமே மரணத்தை மாற்றக்கூடிய அதிசயத்தை செய்ய முடிந்தது. இன்றைக்கு உங்கள் வாழ்விலும் செத்துப்போன நற்குணங்கள் மீண்டும் உயிர்பெறட்டும். மறைந்துப்போன கனங்கள் மறுபடியும் வரட்டும். உங்கள் வாழ்வில் தொலைத்த சகல ஆசீர்வாதங்களும் திரும்ப உங்களைத் தேடி வரட்டும்.

*யாத்திராகமம் 14:1-22* இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து கானானுக்குள் வழிநடத்தி சென்றவர் மோசே. இஸ்ரவேல் ஜனங்கள் பெருந்திரளாக வனாந்தரமான வழியில் பயணம் செய்துக்கொண்டு வந்தபொழுது, செங்கடல் முன்பாக நின்றார்கள். மேற்கொண்டு என்ன செய்வது என தெரியவில்லை, பின்னால் பார்வோனின் படைகள் வந்துக்கொண்டிருக்கிறது, "இந்த வனாந்தரத்தில் சாகும்படிக்காக எங்களை அழைத்துக்கொண்டு வந்தீர்" என மக்கள் முறையிடுகிறார்கள், ஆனால் கர்த்தர் சும்மாயிருக்கவில்லை. அன்று இஸ்ரவேல் ஜனங்களுக்காக கர்த்தர் யுத்தம் செய்தார். செங்கடல் இரண்டாக பிளந்தது, இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள். ஜனங்களை துரத்திக்கொண்டு வந்த எகிப்தியரை கடலின் நடுவிலே தேவன் தாமே கவிழ்த்துப் போட்டார். இதைப்போல உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு உண்டாக்க கர்த்தரால் முடியும் என விசுவாசியுங்கள், ஜெபியுங்கள். ஏனென்றால் இந்த பிரச்சனைகள் மத்தியில் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என பிசாசு உங்களை உற்று கவனித்துக் கொண்டிருக்கிறான். ஆகவே சூழ்நிலைகள் எதுவானாலும் தைரியமாக இயேசுவின் நாமத்தில் எதிர்கொள்ளுங்கள், அதிகாரத்துடன் கட்டளையிடுங்கள். இயேசுவின் நாமம் உங்களை வழிநடத்தும். ஆவியான தேவன் தாமே உங்கள் வாழ்வில் அதிசயங்களை செய்வார்.

பிரியமானவர்களே, கர்த்தருடைய ஆவியானவர் உங்களுக்குள் இருந்தால் மனதில் விடுதலை உண்டாகும், வாழ்வில் விடுதலை உண்டாகும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமை உங்களுக்குள் செயலாற்றும்பொழுது எவ்வளவு சிக்கலான காரியங்களையும் மேற்கொள்வதற்கான தைரியத்தைப் பெறுவீர்கள். கர்த்தருடைய ஆவி உங்களுக்குள் இருக்கும்பொழுது மரணத்திற்கு ஏதுவான காரியங்களும் உயிரடையக்கூடிய அதிசயங்கள் நடைபெறும். ஆகவே எதற்கும் சோர்ந்து போகாதீர்கள். கர்த்தருடைய ஆவியானவர் உங்களுக்குள் செயலாற்ற இடம் கொடுங்கள். பெரிய காரியங்களை காண்பீர்கள்.

Tamil WhatsApp No
+91 95004 87059


Available Now
பரலோகமே
என் சொந்தமே
Dr. Ananda Stira

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

மணியார்டர் (MO) / காசோலை
(cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website)
Bank Account / QR Code
UPI / Google pay / Paytm /
Phonepe




கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

## வங்கிக் கணக்குகளின் விபரம்

| ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS | Dr. ANANDA STIRA |
|---|---|---|
| A/c no. 10848559426 | A/c no. 10848474869 | A/c no. 10848469699 |

IFS Code: SBIN 0000930 State Bank of India, Cantonment, Trichy Main Branch.

**Cell No 94888 45627, 80987 42638**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

# S.J.SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள். 1 தெச.5:15.

நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு. தீத்து 2:1.

மே மாதம் சேலம் மாவட்டம் ராமலிங்கபுரம் பகுதியிலுள்ள நம் டியூஷன் சென்டரில் படிக்கிற மாணவ மாணவியர்களுக்கு விடுமுறை கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. இதில் முன்னூறுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் கலந்துக்கொண்டனர்.

இவர்களுக்கு பலவிதமான பயிற்சிகள் வழங்கப்பட்டன. சிறந்த ஆசிரியர்களை கொண்டு பிள்ளைகளுக்கு தேவையான வாழ்வியல் திறன் (Life Skills) குறித்த பயிற்சிகள், பாடல் மற்றும் பல விளையாட்டுகள் மூலமாக ஊக்குவிக்கும் வகுப்புகள் (Motivational class) நடத்தப்பட்டன. அத்துடன் நல்ல ஒழுக்க நெறிகள் கற்றுத் தரப்பட்டன. பிள்ளைகள் வாழ்வில் எத்தகைய நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும் என்பதைக் குறித்து Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் கற்றுக்கொடுத்தார்கள்.











இந்த நிகழ்ச்சியின் இறுதியில் பயிற்சி பெற்ற பிள்ளைகள் அனைவருக்கும் பரிசு பொருட்களை வழங்கினார்கள். அத்துடன் புரோட்டின் பவுடர், சிக்கன் பிரியாணி, இனிப்பு கார வகைகள் தரப்பட்டது.

தேர்வில் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெற்ற பிள்ளைகளுக்கு கைக்கடிகாரம் (வாட்ச்) தரப்பட்டது. பிள்ளைகள் அனைவரும் மகிழ்ச்சியுடன் சென்றனர். இந்த பிள்ளைகளின் மகிழ்ச்சிக்கு காரணம் நீங்கள் ஒவ்வொருவரும் தான். உங்களுக்கு எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம். திரு. S.D.K. தேவராஜ் அவர்கள் பிள்ளைகளுக்கு வாட்ச் வாங்கி கொடுத்தார்கள். அவர்களுக்கும் எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம்.

இந்த புதிய கல்வியாண்டில் நம் டியூஷன் சென்டரில் படிக்கிற ஏழை, எளிய பிள்ளைகளுக்கு ஸ்கூல் பேக், நோட்டு வகைகள் மற்றும் கல்வி உபகரணங்கள் அனைத்தும் வழங்குவதற்கு நீங்கள் தாராளமாக உதவி செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். ஒரு பிள்ளைக்கு ரூ.1000/- வீதம் 500 பிள்ளைகளுக்கு ரூ.5,00,000 வரை தேவைப்படுகிறது.

மனஉற்சாகமாய் கொடுத்து இந்த பணிகள் சிறக்க உதவி செய்யுங்கள். உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் நிறைவாக ஆசீர்வதித்து காப்பாராக!

## *S.J. SAVES TRUST* -ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய

***Bank A/C Name : S.J. Saves Trust***
***Account No : 019150310875369***
***Bank : Tamil Nadu Mercantile Bank, Palakarai, Trichy.***
***IFS Code : TMBL0000019***
***A/C Type: Current***

# ஜூலை மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

**01** இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (கொலோ.1:13)

**02** கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. (2கொரி.3:17)

**03** கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. (ரோமர் 8:2)

**04** பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். (ரோமர் 6:18)

**05** தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார். (சங்.68:6)

**06** நம்முடைய சத்துருக்களின் கையிலிருந்து நம்மை விடுதலைபண்ணினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. (சங்.136:24)

**07** சிறைப்பட்டுப்போன என்னுடையவர்களைக் கிரயமில்லாமலும் பரிதானமில்லாமலும் விடுதலையாக்குவான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 45:13)

**08** இதோ, பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள். (ஏசாயா 49:25)

**09** சிறைப்பட்டுப்போனவன் தீவிரமாய் விடுதலையாவான்; ...அவனுடைய அப்பம் குறைவுபடுவதுமில்லை.(ஏசாயா 51:14)

**10** உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு,... (லூக்கா 1:71)

**11** பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும். (ஏசாயா 49:25)

**12** விடுதலைபண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள். (லூக்கா 6:37)

**13** உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய். (லூக்கா 13:12)

**14** சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும். (யோவான் 8:32)

15 உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக் கொள்ளுவேன். (ஏசாயா 49:25)

16 குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். (யோவான் 8:36)

17 பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். (ரோமர் 6:18)

18 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. (ரோமர் 8:20

19 அவரே என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறவர். (2சாமு.22:49)

20 கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். (சங்.34:7)

21 தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார். (சங்.107:28)

22 நீதிமான் இக்கட்டினின்று விடுவிக்கப்படுவான். (நீதி.11:8)

23 நீதிமான்களுடைய சந்ததியோ விடுவிக்கப்படும். (நீதி.11:21)

24 கர்த்தர் யாக்கோபை மீட்டு, அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார். (எரே.31:11)

25 அநேகந்தரம் அவர்களை விடுவித்தார். (சங்.106:43)

26 அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார். (தானி.3:28)

27 அவர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி, என்னை விடுவித்தார். (சங்.54:7)

28 நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியை அவர்கள் சிறையிருப்பின் தேசத்திலுமிருந்து விடுவித்து இரட்சிப்பேன். (எரே.46:27)

29 உமது கிருபை நலமானதினால், என்னை விடுவித்தருளும். (சங்.109:24)

30 எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கைவைத்தார்கள்; நம்பின அவர்களை நீர் விடுவித்தீர். (சங்.22:4)

31 உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும். சங்.71:2

# துதி அறிக்கை



## சர்வ வல்ல தேவன் தாமே *Dr.* ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தைக்கேட்டு கொடிய கேன்சர் நோயை நீக்கி அற்புத சுகத்தை தந்தார்

நாங்கள் அன்பரின் ஊழியத்தில் நீண்ட கால பங்காளராக இருந்து வருகிறோம். கடந்த ஜனவரி மாதம் திடீரென என் உடல் நிலை பாதிக்கப்பட்டு, மூச்சுவிட முடியாத நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். அப்பொழுது எடுக்கப்பட்ட பரிசோதனையில் என்னுடைய ஹீமோகுளோபின் அளவு 6 ஆக குறைந்துவிட்டது என்றும், பிளேட்லெட் 50,000-க்கும் குறைவாக இருக்கிறது என்றும், லிவருக்கும் முதுகுதண்டுவடத்திற்கும் நடுவில் கேன்சர் உருவாகி இருக்கிறது என்பதையும் மருத்துவர்கள் கண்டறிந்தார்கள். ஆகவே அதற்குரிய மருத்துவரை பார்க்கும்படியாக சொல்லிவிட்டார்கள்.

அந்த நேரத்தில் மார்த்தாண்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். *Dr.* ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என் பிரச்சனையை பற்றி சொன்னேன். உடனே ஐயா, அம்மா இருவரும் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். அதன்பிறகு மருத்துவமனைக்கு சென்றபொழுது, எண்டோஸ்கோபி மற்றும் பயாப்சி பரிசோதனையில் ஒன்றுமே இல்லை என மருத்துவர்கள் கூறினார்கள். அத்துடன் என்னுடைய ஹீமோகுளோபின் அளவு 12 ஆகவும், பிளேட்லெட் இரண்டு லட்சத்திற்கும் அதிகமாகவும் உயர்ந்தது. எனக்குள் புது பெலன் வந்தது. பரிபூரண சுகத்துடன் இருக்கிறேன். அற்புதமாக சொஸ்தமாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். எனக்காக ஜெபித்த ஐயா குடும்பத்தினருக்கும் என்னுடைய நன்றியை கூறிக்கொள்கிறேன்.

Dr. தர்மராஜ், மார்த்தாண்டம்.

Telugu WhatsApp No
+91 91770 87860

# நோய்கள் நீங்கியது!

எனக்கு இரண்யா பிரச்சனை நீண்ட காலமாக இருந்து வந்தது. என் மகளுக்கு பயங்கரமான தலைவலி இருந்தது. கடந்த ஆண்டு தெலுங்கானாவில் The Last Days Ministries–யில் நடைபெற்ற கூட்டத்தில் *Dr.* ஆனந்த ஸ்திரா தேவ செய்தி கொடுத்தார்கள். ஜெப நேரத்தில் தீர்க்கதரிசனமாக என்னையும் என் மகளையும் பேர் சொல்லி அழைத்து ஜெபித்தார்கள். மகளுக்கு அந்த நேரமே தலைவலி நீங்கியது. மருத்துவமனைக்கு சென்று எனக்கு பரிசோதனை செய்தபொழுது, இரண்யா இல்லை என மருத்துவர் கூறினார். கர்த்தர் தாமே எங்கள் இருவரையும் நோயிலிருந்து விடுதலையாக்கி பரிபூரண சுகத்தை தந்தார். தேவனுக்கே மகிமை!.

-திரு. டேவிட் ராஜ், ஜாஹீராபாத்.

# வேலை கிடைத்தது!



நான் வேலை இல்லாமல் இருந்தபொழுது நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து கலந்துக்கொண்டேன். *Dr.* ஆனந்த ஸ்திரா, *Mrs.* மார்கிரேட் ஸ்திரா இருவரும் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். ஒரு சில நாட்களில் நாகர்கோவிலில் உள்ள ஒரு பள்ளியில் ஜெர்மன் மொழி கற்றுத்தரும் ஆசிரியர் வேலை கிடைக்க கர்த்தர் ஒத்தாசை செய்தார். அதற்காக கர்த்தரை துதிக்கிறேன்.

# சத்துருவின் போராட்டம் நீங்கியது!

எனக்கு பயங்கரமான ஸ்கின் அலர்ஜியும், தோல் எரிச்சலும் இருந்தது. அத்துடன் கனவில் பாம்பு வந்துக்கொண்டிருந்தது. இதனால் மனதில் சமாதானம் இல்லாமல் ஒரு வித போராட்டத்துடன் கஷ்டப்பட்டேன். கடந்த வருடம் செகந்திராபாத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். அந்த நாளிலேயே நோய்கள் நீங்கியது. சத்துருவின் போராட்டம் நீங்கி பரிபூரண சுகத்துடன் சமாதானத்துடன் வாழ்ந்து வருகிறேன். என்னை சுகமாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

-திருமதி. எல்சி இஸ்ரயேல், ஜாஹீராபாத்

## பொருத்தனையோடு ஜெபித்தேன்



எங்கள் மூத்த மகன் வெளிநாட்டில் உள்ள ஒரு கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். ஜனவரி மாதம் 28-ம் தேதியுடன் விசா முடிந்துவிட்ட காரணத்தினால் வேலை செய்யமுடியாமல் இந்தியா வந்துவிட்டான். உடனே நான் அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு மகனுடைய வேலைக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். ஜெப ஊழியர் பாரத்துடன் ஜெபித்தார்கள். நானும் பொருத்தனையோடு ஜெபித்தேன். ஏப்ரல் 29-ம் தேதி மகனுக்கு மீண்டும் விசா கிடைத்து வேலைக்கு சென்றுவிட்டான். தேவனுக்கே மகிமை!

-திருமதி. ஆலிஸ், ஈத்தாமொழி

## குழந்தை பாக்கியம் உண்டானது!



எனக்கு திருமணமாகி ஐந்து வருடங்களாக குழந்தை இல்லை. அத்துடன் இரண்டு முறை கரு கலைந்துவிட்டது. அதனால் மன வேதனையுடன் இருந்தேன். விஜயவாடாவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். அப்பொழுது ஐயா ஜெபித்துவிட்டு இழந்த இரு கருவிற்கு பதிலாக, கர்த்தர் தாமே குழந்தைகளை மீண்டும் தருவார் என தீர்க்கதரிசனமாக சொல்லி ஜெபித்தார்கள். அதன்படியே கர்த்தர் எனக்கு இரங்கி முதலில் ஒரு ஆண் குழந்தை பிறக்கச் செய்தார். சில வருடங்கள் கழித்து இரட்டை குழந்தைகள் (ஆண், பெண்) பிறக்கும்படி உதவி செய்தார். எங்கள் துக்கத்தை மாற்றிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

-திருமதி. சுமா, விஜயவாடா.

English WhatsApp No
+91 94889 32937

# ஊழியம் செய்வோம்!

**ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்.**

**யோவான் 12:26**

**சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை, அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது, சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ.**

**1கொரி.9:16**

**சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.**

**1கொரி.1:18 (மத்.28:18-20)**

எனக்கு பிரியமான தேவபிள்ளைகளே, நாம் வாழுகிற இந்த கடைசி காலத்திலே கர்த்தருடைய சுவிசேஷம் செல்லாத இடங்களுக்கு எல்லாம் சுவிசேஷத்தை மிக விரைவாக கொண்டு செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

உங்களுக்கு மனந்திரும்புதலைக் கொடுத்து இரட்சித்த உன்னத தேவனின் அன்பை பிறருக்கும் அறிவிக்க வேண்டும் என்ற ஊழிய வாஞ்சை இருக்கிறதா? உங்களை அன்பரின் ஊழியத்துடன் இணைந்து ஊழியம் செய்ய அழைக்கிறோம். நீங்கள் வீட்டிலிருந்தபடியே அல்லது பகுதி நேரமாகவோ ஊழியத்தை செய்யலாம்.

அதற்கு ஆயத்தமாக திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் ஊழியர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த முகாமில் கலந்துக்கொள்ள விரும்புகிற தேவ பிள்ளைகள் எங்கள் அலுவலகத்திற்கு தொடர்பு கொள்ளுங்கள்.

கடந்த 10 ஆண்டுகளாக நம்முடைய தீர்க்கதரிசன முகாமில் கலந்துக்கொண்ட Bro.ரெய்மண்ட், Bro.ஜெரால்ட், Bro.பின்டோ, Bro.ஆன்ட்ரு, Bro.முருகன், Bro.ஜான்சன், Bro.சாம், Bro.பாண்டியன், Sis.ஜெயிலா ராணி, Bro.ராமு, Sis.சைலஜா, Sis.சாந்தி, Sis.ஷீபா, Sis.பூங்கொடி மற்றும் ஏராளமான சகோதர, சகோதரிகள் கர்த்தருடைய ஊழியத்தை வல்லமையாக செய்து வருகிறார்கள்.

ஆகவே ஊழிய வாஞ்சை உள்ள, ஆத்தும தாகம் உள்ள அனைவரும் இந்த பயிற்சி முகாமிற்கு வாருங்கள்.

சுவிசேஷத்தை அறிவிப்பதற்கான பயிற்சியை பெற்ற பிறகு, நீங்கள் அன்பரின் ஊழியத்துடன் இணைந்து பணிசெய்ய, இதுவரை யாரும் சென்றிராத கிராமங்களுக்கு சுவிசேஷத்தை கொண்டு செல்ல விரும்புகிறவர்கள் அனைவரும் இந்த ஊழிய பயிற்சி முகாமில் கலந்துக்கொள்ளுங்கள்.

ஊழியர்களை இணைத்து ஜெபிப்பதற்கான ஒரு ஜெப கூடாரம் ஒன்று அமைப்பதற்கும் ஜெபியுங்கள். ஊழியத்தை செய்ய விரும்புகிறவர்கள், ஊழியத்தை தாங்க விரும்புகிறவர்கள் அனைவரும் இணைந்து இந்த ஜெப கூடாரப்பணியை துவங்குவோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# ஊழியர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாம்

நாள்

11.7.26 & 12.7.26 **(சனி, ஞாயிறு)**

நேரம்

**காலை 10:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை**

இடம்

**அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,**
**10-வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு,**
**தில்லைநகர், திருச்சி-18**
**தொடர்புக்கு: 9488845627**

தேவ செய்தி

***Dr.* ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்**

குறிப்பு: அனுமதி, உணவு இலவசம். சிறு பிள்ளைகளுக்கு அனுமதி கிடையாது.
ஊழியத்திற்கு தகுதியானவர்களை நேர்காணல் வாயிலாக தேர்ந்தெடுத்து பயிற்சி தரப்படும்.





# முக்கிய அறிவிப்பு

அன்பரின் ஊழிய பங்காளர்களாகிய நீங்கள் ஊழியத்திற்கு இதுவரை அனுப்பிய காணிக்கை வாயிலாக உங்களுக்கு பத்திரிக்கை அனுப்பி வந்தோம். தற்சமயம் நம்முடைய அலுவலகத்தில் ***New Software Updation*** பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் பங்காளர்களாகிய உங்களிடமிருந்து முக்கியமான சில விபரங்களை பெறவேண்டியுள்ளது. அதற்காக உங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தரும்படியாக அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

1. 2026ம் ஆண்டிலிருந்து பத்திரிக்கைக்குரிய வருட சந்தா தொகை ***Rs.200/-*** தந்தவர்களுக்கு மட்டும் பத்திரிக்கை அனுப்ப கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.
2. ஆகவே நீங்கள் பத்திரிக்கைக்குரிய வருட சந்தா தொகையை மணியார்டர் அல்லது ***GPay*** வாயிலாக அனுப்பும்படியாக கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் கீழ்கண்ட எண்ணிற்கு உடனே தொடர்பு கொண்டு சந்தா அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்தினால் நாங்கள் பத்திரிக்கை அனுப்புவதற்கு உதவியாக இருக்கும். **செல்போன் எண்: 8098742638**
3. அத்துடன் ஒவ்வொரு சந்தாதாரர்களும் தயவுசெய்து உங்கள் பங்காளர்க்குரிய ***Code***-ஐ குறிப்பிட்டு, அதன்பிறகு உங்களுடைய தொலைபேசி எண் அல்லது வாட்ஸ்அப் எண் மற்றும் பிறந்த தேதியை மறவாது தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.
4. பத்திரிக்கை சம்பந்தமாக நம் அலுவலகத்திலிருந்து உங்களுக்கு தொலைபேசி வாயிலாக அழைப்பு வரும்பொழுது சரியான விலாசம் மற்றும் விபரங்களை கூறுங்கள்.
5. நீங்கள் ***E.Magazine*** பெறவிரும்பினால் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உடனே அனுப்பி வைக்கிறோம். செல்போன் எண்: **9488932937**
6. நீங்கள் நடப்பு ஆண்டிற்குரிய சந்தா தொகையை செலுத்தியிருந்தும், உங்கள் விலாசத்திற்கு பத்திரிக்கை வரவில்லையென்றால் உடனே அலுவலகத்திற்கு தெரியப்படுத்துங்கள்.

◆◆◆◆◆



# உலக செய்திகள்

நாம் பூமியில் வாழ்கிறோம், ஆனால் இந்த பூமியின் 70 சதவீதத்திற்கும் மேலான பகுதியை ஆக்கிரமித்துள்ள பெருங்கடல்களைப் பற்றி நமக்குத் தெரிந்திருப்பது மிகக் குறைவுதான். விண்வெளியின் கோடிக்கணக்கான மைல் தொலைவில உள்ள கிரகங்களை ஆய்வு செய்யும் அளவிற்கு தொழில்நுட்பம் வளர்ந்திருந் தாலும், நம் கண் முன்னே இருக்கும் கடலின் ஆழமான பகுதிகள் இன்றும் மனிதர்களுக்கு ஒரு பெரிய மர்மமாகவே இருக்கின்றன. கடலின் ஆழம் செல்லச்செல்ல, சூரிய ஒளி கூட நுழைய முடியாத இருண்ட உலகமாக அது மாறுகிறது. இந்த இருட்டில் கற்பனைக்கும் எட்டாத விசித்திரமான உயிரினங்களும் மலைப்பகுதிகளைவிடப் பெரிய பள்ளத்தாக்குகளும் ஒளிந்திருக்கின்றன.

❖❖❖❖❖

பூமியில் ஒரு சிறிய வைரத்தைப் பெறுவதற்கே நாம் பல லட்சம் ரூபாய்களைச் செலவிட வேண்டியிருக்கிறது. ஆனால், இந்த பிரபஞ்சத்தில் மனித கற்பனைக்கும் அப்பாற்பட்ட விந்தையான கிரகங்கள் உள்ளன. அங்கே நாம் விலைமதிப்பற்றதாகக் கருதும் வைரங்கள் மழையாகவே பொழிகின்றன என்று சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா? இது ஏதோ அறிவியல் புனைகதை கதைகளில் வரும் கற்பனை அல்ல, மாறாக விண்வெளி ஆய்வாளர்கள் கண்டறிந்த உண்மையான அறிவியல் உண்மை. சனி மற்றும் வியாழன் போன்ற வாயு கோள்களின் வளிமண்டலத்தில் ஏற்படும் அதீத அழுத்தம் மற்றும் வெப்பத்தின் காரணமாக, கார்பன் அணுக்கள் இணைந்து வைரங்களாக மாறி மழையாகப் பொழிகின்றன. இந்த அபூர்வ நிகழ்வு, நமது சூரிய குடும்பத்தின் அற்புதம் மற்றும் பிரபஞ்சத்தின் பிரம்மாண்டத்தை நமக்கு மீண்டும் ஒருமுறை உணர்த்துகிறது.

கடலின் ஆழமான பகுதியில், அதாவது ‘அபிசல் மண்டலம்‘ *(Abyssal Zone)* எனப்படும் பகுதியில், அதீத அழுத்தம் நிலவுகிறது. இவ்வளவு அழுத்தத்தையும் தாங்கிக்கொண்டு உயிரினங்கள் எப்படி வாழ்கின்றன என்பதே வியப்பிற்குரியது. இந்த ஆழத்தில் வாழும் பல உயிரினங்களுக்குக் கண்கள் கிடையாது; மாறாக, அவை தங்கள் உடலிலிருந்து ஒளியை உமிழும் *(Bioluminescence)* தன்மையைக் கொண்டுள்ளன. வேட்டைக்காரர்களிடமிருந்து தப்பிக்க அல்லது இரையை ஈர்க்க இந்த ஒளியை அவை பயன்படுத்திக்கொள்கின்றன. உதாரணமாக, ஆழ்கடல் மீன்கள் தங்களின் தலையிலேயே ஒரு மின்விளக்கைப் போல ஒளியை உமிழும் உறுப்பைக் கொண்டுள்ளன. இதைப் பார்க்கும் போது, ஏதோ ஒரு வேற்று கிரகத்தில் இருக்கும் உயிரினங்களைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

# அவசர வேண்டுகோள்

*உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள், உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர். (சங். 36:8)*

*இந்தக் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவரத் தொடங்கினதுமுதல் நாங்கள் சாப்பிட்டுத் திர்ப்தியடைந்தோம், இன்னும் மிச்சமும் இருக்கிறது, கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது என்றான். 2நாளா. 31:10.*



கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பரின் ஊழிய பங்காளர்களே,

ஊழியத்தின் துவக்கத்திலிருந்து பங்காளராகிய நீங்கள் ஒவ்வொருவரும் எங்களோடு இணைந்து ஜெபித்து காணிக்கை வழியாக ஊழியத்தை தாங்கி வருவதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம்.

நம்முடைய அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், அலுவலகம், ஸ்டுடியோ மற்றும் ஆலயம் (டெலிவரன்ஸ் திருச்சபை) 15 ஆண்டுகளாக தேவ கிருபையால் நன்றாக இயங்கி வருகிறது.

இந்த நாட்களில் அலுவலக பணி மற்றும் இணையதளம் வாயிலாக மேற்கொள்ளப்படுகிற அனைத்து பணிகளுக்கும் கணினியின் செயல்பாடு அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. குறிப்பாக கணினி சர்வர் ***(Computer Server)*** மிகவும் பழமை அடைந்துவிட்டது. அலுவலக உபயோகத்திற்கு இருக்கிற அனைத்து ***computers*** புதுப்பிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ௫ வருடங்கள் கழித்து இவைகளை புதுப்பிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த பணிக்கு 5 இலட்சம் முதல் 7 இலட்சம் வரை தேவைப்படுகிறது.

மேலும் புதிய வீடியோ கேமராக்கள், லென்ஸ் வாங்கவேண்டும். இதன் விலை 7 முதல் 10 இலட்சமாக இப்பொழுது உள்ளன.



அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தின் ***Conference Hall***-லில் உள்ள டைல்ஸ் பழுது அடைந்த காரணத்தினால் விரைவாக அவற்றை புதுப்பிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இந்த பணிகள் முடிக்க உங்களுடைய ஜெபத்தையும், உதவிகளையும் எதிர்பார்க்கிறோம். நீங்கள் மனஉற்சாகமாய் பொருத்தனையோடு இந்த பணிக்கு காணிக்கைகளை அனுப்பி தாங்கும்படியாக அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் விபரங்களுக்கு இந்த எண்ணை **95004 87061** தொடர்பு கொள்ளுங்கள்.

***Name : MINISTRY OF JESUS***
***A/C No: 10848474869***
***Bank: State Bank Of India, Cantonment,***
***Trichy Main Branch | IFS Code: SBIN 0000930***

# புதிய மாதத்தின் ஆசீர்வாதக்கூட்டம்

## (NEW MONTH BLESSING MEETING)

நாள் : **ஜுலை 1 புதன்கிழமை**

நேரம் : மாலை 6:00 மணி முதல் இரவு 8:30 மணி வரை

இடம் : **டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்**

10-வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு,

தில்லைநகர், திருச்சி-18. தொடர்புக்கு : 99421 66066 & 94888 45627

தேவ செய்தி

*Rev.Dr.A.ஜாஷ்வா, Dr. ஜேன் ஜாஷ்வா & Bro. ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா*

# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

**ஞாயிறு தோறும்**

**காலை 9.30 மணி - 11.30 மணி**

- அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ஆவிக்குரிய தேவ செய்தி
- உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**Live @ My Deliverance Church**




டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்

10-வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.

# அனுதின அற்புதம்

DAILY MIRACLE

**MINISTRY OF JESUS**



தினமும் காலை 5 மணி

இந்த QR CODE - ஐ ஸ்கேன் செய்து
நமது அனுதின அற்புதம் நிகழ்ச்சிகளைக்
காணலாம்.


WANTED
ACCOUNTANT
(B.Com. / M.Com. Graduates)
Candidates with Experience
Preferred
ministryofjesushr@gmail.com


we are
HIRING
Join
OUR TEAM
CORRESPONDENCE
(Any UG/PG Candidates)
Skills Required: Typing & Computing Skills
(Tamil,English)
DRIVER
SEND YOUR RESUME TO
ministryofjesushr@gmail.com


CAMERA MAN &
VIDEO EDITORS
(Any UG/PG Candidates)
Skills Required : with adequate experience
Able to work in Adobe Premiere Pro & After Effects
Male / Female, Christians Preferred, Accommodation will be provided
Apply to: ministryofjesushr@gmail.com



திருச்சியில்
அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்
ஜூலை 25
சனிக்கிழமை
காலை 9.30 மணி
முதல்
மதியம் 2.00 மணி
வரை
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு (80 அடி ரோடு),
தில்லைநகர், திருச்சி.
தொடர்புக்கு : 9488845627 & 0431- 2741925




கன்னியாகுமரி மாவட்டம் மாங்கரையில்
கன்வென்ஷன் கூட்டங்கள்
நாள் : ஆகஸ்ட் 7, 8, 9 - வெள்ளி, சனி, ஞாயிறு
நேரம்: மாலை 6:00 மணி
இடம்: C.S.I. ஆலயம்
மாங்கரை பாஸ்ட்ரேட்
கன்னியாகுமரி திருமண்டலம்.
தொடர்புக்கு
Rev. Herold Anith - 9487264204
குறிப்பு
8ம் தேதி சனிக்கிழமை காலை
10 மணிக்கு பெண்களுக்கான
சிறப்பு கூட்டம் நடைபெறும்.
தேவ செய்தி
Rev.Dr.A. ஜாஷ்வா & Dr. ஜேன் ஜாஷ்வா

# புதிய மாதத்தின் ஆசீர்வாதக்கூட்டம்

## (New Month Blessing Meeting)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, வருடத்தை நன்மையினால் முடிசூட்டுகிற தேவன் ஒவ்வொரு மாதத்தையும் நன்மையாக முடிசூட்டி நம்மை ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஒவ்வொரு புதிய மாதத்திலும் தேவ சமூகத்திலே தேவன் கொடுக்கும் வார்த்தையை பெற்றுக்கொண்டு நீங்கள் ஆசீர்வதிக்கப்பட உங்களுக்காகவே ஒவ்வொரு மாதத்தின் முதல் நாள் மாலை 6 மணி முதல் இரவு 8:30 மணி வரை இந்த சிறப்பு கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளோம்.

## வாருங்கள்! ஆசீர்வாதம் பெற!

### ஆகஸ்ட் 1 சனிக்கிழமை

**நேரம்**

**மாலை 6:00 மணி முதல்**
**இரவு 8:30 மணி வரை**

**தேவ செய்தி**

**Rev.Dr.A. ஜாஷ்வா**
**Dr.ஜேன் ஜாஷ்வா**
**Bro.ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா**



**இடம் : டெலிவரன்ஸ் சர்ச்**

**அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10–வது குறுக்குத் தெரு**
**மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி–18.**
**தொடர்புக்கு : 99421 66066 & 94888 45627**

- கூட்டத்தில் பங்குபெறுகிற ஒவ்வொருவருக்கும் ஜெப எண்ணெய் பூசி விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.

பரவசமூட்டும் ஆராதனை
நம்பிக்கையூட்டும் தேவ வார்த்தை
விடுதலையாக்கும் ஜெபம்